செ.வெ.எண்:25 நாள்:20.12.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் மண்டல அலுவலர்களுக்கான பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக முத்து அரங்கில் முதல் கட்டமாக ஊரக உள்ளாட்சி தேர்தல் மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று (20.12.2019) நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் பால கோபாலன், இ.கா.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் 2 கட்டங்களாக நடத்தப்படுகிறது. முதல் ட்டமாக 7 ஊராட்சி ஒன்றியங்களிலும், 2ம் கட்டமாக 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெறுகிறது. மொத்தம் 3537 பதவிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. இதில் முதல் கட்ட தேர்தலுக்கு 64 மண்டலங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் 15 முதல் 20 வாக்குச்சாவடிகள் இருக்கும். மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள நீங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து வாக்குச்சாவடிக்கான பொருட்களை கொண்டு செல்ல (டூட் மேப்) வரைபடம் தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு மாற்று வழியிலான வரைபடத்தினையும் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், மண்டல அலுவலர்கள் முன்னதாகவே வாக்குச்சாவடிக்கு சென்று அங்கு மின்சார வசதி, சாய்தளம் வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட முக்கிய அடிப்படை வசதிகள் உள்ளதா என்பதை ஆய்வு செய்து அவைகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். முதல் கட்ட தேர்தலுக்கு 26ம் தேதி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலிருந்து ஒட்டு பெட்டி உள்ளிட்ட வாக்குச்சாவடிக்கு தேவையான பொருட்களை எடுத்துச் சென்று தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்குச்சாவடிகளில் ஒப்படைக்க வேண்டும். மேலும், வாக்குப்பதிவின் போது ஏற்படும் பிரச்சனைகளை உடனுக்குடன் சென்று தீர்த்து வைக்க வேண்டும். உள்ளாட்சி தேர்தலை பொறுத்தவரை சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, மண்டல அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்களுடன் தொடர்பில் இருந்து கவனத்துடன் பணியாற்ற வேண்டும். நமது மாவட்டத்தில் 374 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை மற்றும் மிக பதற்றமானவயாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த வாக்குச்சாவடி பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பு செய்யப்பட்டாவும், மண்டல அலுவலர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குப்பெட்டி உள்ளிட்ட பொருட்களை பாதுகாப்புடன் எடுத்துச் சென்று வாக்கு எண்ணிக்கை மையத்தில் ஒப்படைக்க வேண்டும். இப்பயிற்சியின் போது தங்களுக்கு தெரிவிக்கப்படும் கருத்துக்களை தெரிந்து கொண்டும், வழங்கப்படும் கையேட்டினை முழுமையாக படித்து ஊரக உள்ளாட்சி தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி சிறப்பாக பணியாற்ற வேண்டும்.

இக்கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பயிற்சி) திரு.ஆல்பர்ட் ஜாண், இ.கா.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (ஊரக உள்ளாட்சி தேர்தல்) திரு.சந்திரசேகரன் மற்றும் துனை காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.